Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 1, Special Issue - 1, January 2022** **E-ISSN: 2583-0481**

# Marginalized People in the Novel "Piragu"

**S.Reena,** Part- Time Research Scholar, Department of Tamil, Annamalai University, Annamalai Nagar, Chidambaram – 608002.
ORCiD: https://orcid.org/0000-0002-6382-0802
**DOI: 10.5281/zenodo.6622659**

## Abstract

*Novel is one of the contemporary literatures in Tamil literature and is liked and read by the learned age group of people. Many novel writers have registered about the marginalized people who were economically backward in Tamil Nadu. In terms of it, the writer Poomani in her "Piragu" novel has exposed about their economic condition of the poor people and their struggle in a spectacular manner. She also shows how they were illiterated in society and subjugated. Finally, the writer paves a good path of development through the end of the novel with the virtues. This article points out the state of the people and explains about it in an ample manner.*

**Keywords:** Marginalized People, Struggle, Poomani, *Piragu*.

.

## References

[1] Dr.S. Eswaran. *Tamil Ilakkiya Varalaru*.
[2] Poomani. *Piragu*.
[3] Jayamohan. *Pookum Karuvelam*.
[4] Dr. P.Bagavathy. *Poomani.*
[5] R.S. Sugintha Basmuth. *Dalith Ilakkiyamum Samooga Vizhi Punarvum.*
[6] Dr Na. Pitchamuthu. *Thiranaivum Tamil Ilakkiya Kolgaigalum.*
[7] Dr Ka. Ko. Venkataraman. *Tamil Ilakkiya Varalaru*.
[8] Dr Prof. Ramu. *Tamil Ilakkiyangalil Ariviyal Koorugal*.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்

அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்



மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# "பிறகு" நாவலில் விளிம்பு நிலை மாந்தர்

**சு.ரீனா,** முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்), தமிழியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர், சிதம்பரம் - 608002.

ORCiD: https://orcid.org/0000-0002-6382-0802

DOI: 10.5281/zenodo.6622659

**ஆய்வுச்சுருக்கம்**

*இக்கால இலக்கியங்களுள் ஒன்றான நாவல் இலக்கியம் அனைவராலும் விரும்பி படிக்கப்படுகிறது. இத்தகைய நாவல் இலக்கியங்களில் பொருளாதார ரீதியாக பின் தங்கியுள்ள விளிம்பு நிலை மாந்தர்கள் குறித்து பல்வேறு ஆசிரியர்கள் பதிவு செய்துள்ளனர். அவ்வகையில் பூமணி அவர்கள் தன் "பிறகு" நாவலில் விளிம்பு நிலை மாந்தர்களின் பொருளாதார நிலை போராட்டநிலை, சமுதாயத்தில் மரியாதைக் குறைவாக நடத்தப்படுதல், நட்புறவு உள்ளிட்ட வாழ்க்கை நிலையை எடுத்துக்காட்டி இறுதியில் அவர்களின் முன்னேற்றத்திற்கு வழிவகை செய்யும் நோக்கில் நாவலை முடித்துள்ளார். அதனை சுட்டிக்காட்டி விளக்குவதாக இவ்வாய்வு அமைந்துள்ளது.*

**திறவுச் சொற்கள்:** விளிம்புநிலை மாந்தர், அடிப்படைத் தேவைகள், போராட்டநிலை, *பிறகு*.

**முன்னுரை**

மலையிடைப் பிறந்து மாந்தர்தொழ உயர்ந்து உலகின் இருளைப் போக்கும் ஆற்றல் பெற்ற அரிய சக்தி இரண்டு மட்டுமே. ஒன்று செங்கதிர்! மற்றது செந்தமிழ்! ஆம் நம்முடைய அக இருளை அகற்றி வானுயர்ந்து நிற்கும் மொழி தமிழ்மொழி ஆகும். அறிஞர்கள் தாம் அறிந்த கருத்துக்களையும் உணர்ந்த உணர்ச்சிகளையும் அளந்து உரைப்பதற்குப் பயன்படுத்தும் கருவி மொழி ஆகும். அம்மொழிபேசும் மக்களின் முடிந்த கொள்கைகளையும், முதிர்ந்த குறிக்கோள்களையும் தன்னகத்தே கொண்டு திகழும் இயல்புடையதுதான் இலக்கியம்.

**தமிழ் இலக்கியங்கள்**

இலக்கியங்கள் வாழ்வியல் கருத்துகளின் களஞ்சியமாகத் திகழ வேண்டுமாயின் அது காலத்தைக் கடந்து நிற்கும் ஆற்றல் உடையதாக இருக்க வேண்டும் என்பர். அத்தகைய ஆற்றல் உடையதுதான் தமிழ் இலக்கியங்கள். தமிழ் இலக்கியம் எல்லாக் காலங்களிலும் ஒரே படித்தானதாக இருந்ததில்லை. உலகத்து ஒழுகலாறுகள் மாறமாற சூழ்நிலைக்கேற்ப இலக்கியங்களும் மாற்றமடைதல் இயல்பு.

**"பழையன கழிதலும் புதியன புகுதலும்**
**வழுவல கால வகையினானே" (தொல்)**

எனக்கூறிப் புதுமை தோன்றுவதை வரவேற்கிறார் தொல்காப்பியர். அதற்கேற்ப சங்க காலத்தில் காதலையும், வீரத்தையும் பாடுபொருளாக கொண்ட இலக்கியங்கள் படிப்படியாக நீதிகளையும் அறங்களையும், பக்தியினையும் பொழுது போக்கினையும், நிலையாமையையும் பாடுபொருளாக

மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

கொண்டன. இவ்வாறு உள்ளடக்கம் மாறும்போது வடிவமும் மாறும் என்ற நியதிப்படி இலக்கியங்களில் புதிய வடிவங்கள் தோன்றலாயின.

**நாவல் இலக்கியம்**

தமிழகத்தில் ஏற்பட்ட அரசியல், சமயம், பொருளாதாரம் ஆகிய கூறுகளை உள்ளடக்கிய சமுதாய மாற்றத்திற்கேற்பத் தோன்றிய புதியவகை இலக்கியம் நாவல் ஆகும். “புதினங்கள் இனிப்புகள் தரமான இலக்கியப்பசி கொண்ட எல்லோரும் அவற்றை விரும்புகின்றனர்" என்பார் வில்லியம் தாக்கரே "மனித வாழ்க்கையின் விளக்கமே நாவல்' என்கிறார் ஏர்னஸ்ட் ஏ.பாக்கர். ஆகவே இக்கூற்றுகளுக்கு ஏற்ப மனிதனின் வாழ்வியல் உண்மைகளை படம் பிடித்து பதிவு செய்பவையாக நாவல் இலக்கியங்கள் உள்ளன. எனவே இக்காலத்தில் நாவல் அனைவராலும் விரும்பி படிக்கப்படுவதாக இருந்து வருகின்றது.

**விளிம்புநிலை மாந்தர் ஓர் விளக்கம்**

சமுதாயம் என்பது பல்வேறு அடுக்குகளை கொண்ட ஓர் அமைப்பாகும். சமூக பொருளாதார முரண்பாடுகள் சமுதாய ஏற்றத்தாழ்வை உருவாக்குவதில் முதன்மை வகிக்கின்றன. உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற வேறுபாட்டை சமூகம் ஏற்படுத்துகிறது. இதன் அடிப்படையில் சாதி, சமய, பொருளாதார, தொழில், ரீதியாக முன்னேறியவர்களை மேல்தட்டு மையம் எனவும், கீழ் உள்ளவர்களை விளிம்பு நிலையினர் எனவும் பொருள் கொள்ளலாம். விளிம்பு நிலை என்ற சொல் இலக்கிய வட்டத்தில் அதிகம் பேசப்படுகின்ற சொல். விளிம்பு நிலை மனிதர்கள் என்பவர்கள் மிகவும் ஒடுக்கப்பட்ட, சமூகத்தின் மீது எந்த பாதிப்பையும் ஏற்படுத்த முடியாத அளவுக்கு பொருளாதார மற்றும் நாகரிக அளவில் பின் தங்கிய சமூக பிரிவினரைக் குறிக்கிறது. தலித் இலக்கியம் விளிம்பு நிலை மக்களை உள்ளடக்கிய இலக்கியம் ஆகும்.

**பூமணி நாவல்களில், விளிம்பு நிலை மாந்தர்**

விளிம்பு நிலை மனிதர்கள் அன்றாட வாழ்வில் சந்திக்கும் சிக்கல்களைத் தமது புனைகதைகளில் கையாண்டு அச்சிக்கல்களுக்குத் தீர்வு சுட்டுகின்ற எழுத்தாளர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் பூமணி அவர்கள் ஆவார். அவ்வகையில் பொருளாதாரத்தில் பின்தங்கிய சலவைத் தொழிலாளிகள், செருப்பு தைக்கும் தொழிலாளிகள், நாடார் இன மக்கள் ஆகியோர் சமூகத்தில் அடையும் துன்பங்களையும் இன்னல்களையும் தன் நாவலில் வெளிப்படுத்துகிறார்.

**பிறகு நாவலில் விளிம்புநிலை மாந்தர்**

அருந்ததியர் இனத்தைச் சார்ந்த அழகிரி என்பவனை முதன்மைப் பாத்திரமாகக் கொண்டு படைக்கப்பட்ட நாவலே 'பிறகு' என்பதாகும். சாதாரண நிகழ்ச்சிகள் மூலம் நாவலில் சித்தரித்துள்ளார். பூமணி மணலூத்து கிராமத்தின் ஆதிக்க சாதியைச் சார்ந்த கந்தையாவுக்கும் அக்கிராமத்தின் அடித்தள சாதியைச் சார்ந்த அழகிரிக்கும் இடையேயான நட்புறவை பூமணி தன் நாவலில் மிக நுட்பமாக சித்தரித்துள்ளார். மணலூத்து கிராமத்திற்கு அழகிரி வந்த நினைவில் இருந்து நாவல் தொடங்குகிறது. “ஏலேய் சக்கிலியத் தாயளி மாடு பாருடா" என்று கருப்பனை நோக்கிக் கூவும் குரலுடன் நாவல் தொடங்குகிறது. சாதியின் பெயரை சொல்லித் திட்டுவதிலிருந்து அவர்கள் நிலையை உணர்த்துகிறார் ஆசிரியர்.

**வறுமை நிலை**

சமுதாயத்தில் அடிமட்டத்தில் வாழ்ந்து வரும் தாழ்த்தப்பட்ட நிலமற்ற ஏழைகளான இவர்கள்

பண்ணை முதலாளிகளையும் செல்வந்தர்களையும் சார்ந்தே வாழ்கின்றனர். தனக்கென்று உறவுகள் ஏதும் இல்லாத கருப்பன் தம் நிலத்தில் மாடு மேய்ப்பதை பார்த்த பண்ணைக்காரர் ஒருவர், கருப்பனை வசவு பாடுகிறார். அப்போது கருப்பன்,

**'சாமியோவ் வையாதங்க அது வேற ஆரு மாடுமில்ல நம்ம கெடாரிதான்" என்கிறான். அதற்கு அவர் "ஆமலே ஊருக்காரன் மாடு மேஞ்சாலும் நம்மதுதான்" மேயும் மேயும் மொதல்ல ஒன் குண்டித் திமிர எறக்கணும்" என்கிறார். அதற்கு கருப்பன் ஏற்கனவே குண்டி தஞ்சு கெடக்கென் நீங்க வேற ஏறக்காதங்க ஒங்களுக்குப் புண்ணியமாப் போகுது. (பிறகு, ப-5)**

என்று கூறுவதிலிருந்து அடிப்படைத் தேவையான உணவுகூட சரியாக கிடைக்காமல் மெலிந்த தேகங்களுடன் உயிரைச் சுமந்து திரிகிறார்கள் என்ற வறுமை நிலையை ஆசிரியர் படம்பிடித்துக் காட்டுகிறார். மேலும் சக்கணன் கதாபாத்திரம் வழி ஊருக்குள் அருந்ததியர் குடியேறிய வரலாற்றினையும் கூறுகிறார்.

**அடிமை நிலை**

மேல் சாதியைச் சார்ந்தவர்கள் கீழ்த்தட்டு மக்களை சாதிப் பெயர் சொல்லி அழைத்ததையும் ஏளனமாக மரியாதைக்குறைவாகப் பேசுவதையும் பதிவு செய்துள்ளார்.

**"ஏ வூருப்பா"**

**"தொரச்சியாவரஞ்சாமி"**

**"தொரச்சியாவரத்துல ஒரு**

**"அழகிரிப் பகடைங்க சாமி"**

**"சக்சிலிப்பனாண்டா இட்ட ஏமி குடியிருக்கவரா" (பிறகு பூமணி)**

என்ற உரையாடலில் "சாமி" என்ற சொல்லைக் கேட்டவுடன் அழகிரியைத் தாழ்த்தப்பட்டவன் என்று புரிந்து கொண்ட கிழவர் "சக்கிலியப்பயலா இங்கே என்ன குடியிருக்கவா" என்று பேச்சில் மரியாதையைக் குறைப்பதை சுட்டிக் காட்டுகிறார்.

**போராட்ட நிலை**

மணலூத்தை சார்ந்த புதுப்பணக்காரரான அப்பையா நாயக்கர், சாமியின் மனைவியான வீரியுடன் அவள் வீட்டிலேயே கள்ள உறவு கொள்ள முயற்சிக்கிறார். அதனைக் காண நேர்ந்த அழகிரி அதனைத் தடுப்பதோடு விறகுக் கம்பால் இருவரையும் அடித்துவிடுகிறான். தவறு செய்கிறவர் தன்னைவிட மேல்சாதியாக இருந்தாலும் தட்டிக் கேட்கும் தைரியமுள்ளவராக அழகிரியைக் காட்டுகிறார் ஆசிரியர். அதனால் கோபம் கொண்ட நாயக்கர் அழகிரியைப் பழிவாங்க தனது தோட்டத்தில் நீர் இறைக்கும் பொருட்கள் காணாமல் போனதாகவும் அதனை அழகிரி தான் திருடி இருக்க வேண்டும் எனவும் குற்றம் சாட்டுகிறர். அதனால் இதனையெல்லாம் போராடி தாண்டி வரும் அழகிரி, கந்தையா இறந்த பிறகு குருசாமி நாயக்கர் மகனுக்கு கந்தையாவின் மூத்த மகளை திருமணம் செய்து வைக்க முயற்சிக்கிறார். அடுத்த ஊருக்கு அனாதையாக வந்த கருப்பனுக்கு அடைக்கலம் கொடுத்து ஆளாக்குகிறான், அழகிரி! இவ்வாறு கீழ்ச்சாதியைச் சார்ந்த அழகிரியின் நட்புறவு, பொருளாதாரம், போராட்ட உணர்வு ஆகியவற்றை ஆசிரியர் படம் பிடித்துக் காட்டுகிறார்.

**இணக்கமான, சமுதாயம்**

நாம் அனைவரும் பிளவுபடாமல் முரண்படாமல் ஒற்றுமையுடன் நம்மை முன்னேற்றப்பாதையில் அழைத்துச் செல்லும் சமூகமே ஒரு இணக்கமான சமூகம் ஆகும். அவ்வகையில்

தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த அழகிரி மேல்தட்டு வகுப்பைச் சார்ந்த கந்தையாவுடன் கொண்ட நட்புறவு, தவறு நிகழும் போது அதனை தட்டிக்கேட்டல், முத்துமாரியன் மீது ஆவடை கொண்ட அன்பு என அழகிரியின் வாழ்வியல் நிகழ்வுகளை மாற்றுச் சிந்தனைகளுடன் பூமணி முன்மொழிந்துள்ளார். இவ்வாறு ஏறத்தாழ இருபத்தைந்து வருடகாலப் பின்னணியில், கரிசல் நிலத்தின் ஒரு கிராமத்தில் அடித்தள மக்களின் வாழ்க்கையில் மிகமிக மெதுவாக ஏற்பட்ட மாறுதல்களை காட்டுகிறார்.

**முடிவுரை**

"ஏலேய் சக்கிலியத் தாயளி மாடு பாருடா" என்று கருப்பனை நோக்கிக் கூவும் குரலுடன் தொடங்கி பள்ளிக்குச் செல்லும் தன் பேரனை பார்த்து "அடேய் கீழே விழுந்துராதடா" என்ற கூறும் அழகிரியின் அறைகூவலுடன் நாவலை முடிக்கும் ஆசிரியர் விளிம்புநிலை மக்களின் முன்னேற்றத்திற்கு அச்சாரம் போடுகிறார்.

**துணை நூற்பட்டியல்**

[1] முனைவர் ச. ஈஸ்வரன். *தமிழ் இலக்கிய வரலாறு.*

[2] பூமணி. *பிறகு.*

[3] ஜெயமோகன். *பூக்கும் கருவேலம்.*

[4] முனைவர் பி.பகவதி. *பூமணி.*

[5] இரா.ச. ககிர்தா பஸ்மத். *தலித் இலக்கியமும் சமூக விழிப்புணர்வும்.*

[6] முனைவர் ந. பிச்சமுத்து. *திறனாய்வும் தமிழ் இலக்கியக் கொள்கைகளும்.*

[7] முனைவர் கா.கோ.வேங்கடராமன். *தமிழ் இலக்கிய வரலாறு.*

[8] முனைவர் பேரா.ராமு. *தமிழ் இலக்கியங்களில் அறிவியல் கூறுகள்.*

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.